மேலும், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட உலகத் தமிழறிஞர்களின் கோரிக்கையினை ஏற்று முன்னாள் முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தஞ்சாவூரில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெருகிவரும் மாணவர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டும், கட்டட வசதிகளின் தேவையைக் கருத்திற்கொண்டும், 15 கோடி ரூபாய் செலவில் இரண்டு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக, பழந்தமிழரின் சிறப்புகளையெல்லாம் நாட்டுக்கு எடுத்துக்காட்டும்வகையில், சுடுமண் சிற்பம், சுதைச் சிற்பம் மற்றும் மரம், கல், உலோகம் ஆகியவற்றைக் கொண்டு படிமங்களாக வடிவமைத்த கலைப் பொருட்களைக் கொண்டு பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் தமிழ் மொழியை மேலும் வளர்க்கவும், தமிழ் ஆர்வலர்களை ஊக்குவிக்கவும், பழந்தமிழரின் வாழ்வியல் நெறிகள் குறித்து இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி எதிர்கால தலைமுறையினரும், உலக மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. கவன ஈர்ப்பு

### ஸ்ரீபெரும்புதூர், நோக்கியா நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் சிலர் பணி இழக்கும் சூழ்நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது

2014 ஜூலை 25] [பேரவைத் தலைவர்]

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர், நோக்கியா நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் சிலர் பணி இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அறிக்கை**

ஃபின்லாந்தை தலைமை இடமாகக் கொண்ட நோக்கியா நிறுவனம் 6-4-2005-ல் தமிழக அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இவ்வொப்பந்தம் ஏற்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ரூபாய் 675 கோடிக்குக் குறையாத முதலீட்டில் செல்லிடைத் தொலைபேசி உற்பத்தித் தொழிற்சாலையை சென்னை அருகில் ஸ்ரீபெரும்புதூரில் அமைப்பதற்கு பொறுப்புறுதி அளித்திருந்தது.

நோக்கியா நிறுவனம் இதுவரை சுமார் 1,700 கோடி ரூபாய் முதலீடு செய்து, 7,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 3,500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் வழங்கியிருக்கிறது. இவர்களில் 60% பெண்களாவர்.

நோக்கியா நிறுவனம் 6-4-2005-ல் தமிழக அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அளித்திருந்த முதலீடு தொடர்பான பொறுப்புறுதியை நிறைவு செய்திருந்தாலும், இதற்காக அரசு அளிப்பதாக உறுதியளித்திருந்த எந்தவொரு மானியத்தையும்/வரிச் சலுகையையும் அரசிடமிருந்து நோக்கியா நிறுவனம் இதுநாள்வரை பெறவில்லை.

நோக்கியாவின் சென்னை உற்பத்தி நிறுவனம், ஃபின்லாந்திலிருந்து செயல்பாட்டு வழிமுறை (Operating System)

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 25

மென்பொருள் நகல்களை ஸ்ரீபெரும்புதூரில் தயாரிக்கப்படும் கைபேசிகளில் பொருத்த, கொள்முதல் செய்கிறது. இந்தியாவிற்கும் ஃபின்லாந்து நாட்டிற்குமிடையே கையொப்பமிடப்பட்ட இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தப்படி, இந்தியாவிலிருந்து ஃபின்லாந்து நிறுவனம் பெறும் ராயல்டி அல்லாத வர்த்தக வருமானத்தின்மீது இந்தியாவில் வரி விதிக்கக்கூடாது. அதேசமயம் ராயல்டி வருமானம் எனில் 10% வரி பிடித்தம் செய்ய வேண்டும்.

2006-ல் இந்தியாவில் உற்பத்தி துவங்கிய நாளிலிருந்து, நோக்கியா கார்ப்பரேஷன் அதன் இந்திய மென்பொருள் வருமானத்திற்கான அனைத்து வரிகளையும் ஃபின்லாந்தில் செலுத்தியுள்ளது.

மத்திய அரசு பிறப்பித்த முன்தேதியிட்டு நடைமுறைபடுத்தப்பட்ட (retrospective effect) நிதிச் சட்டம், 2012-ல் கொண்டுவரப்பட்ட திருத்தங்களின்படி 1-6-1976-லிருந்து கணினி மென்பொருள்களுக்கு வழங்கப்படும் தொகை, ராயல்டி வருமானமாகக் கருதப்படும். 2013 மார்ச்சில் 2006-2007 முதல் 2011-2012 வரையிலான நிதி ஆண்டுகளில் ரூபாய் 2,080 கோடி வரித் தொகை, மென்பொருள் சப்ளை செய்ததற்காக நோக்கியாவிற்கு வழங்கியவகையில் 'கட்டத் தவறியவர்' எனக் குற்றம் சாட்டப்பட்டு, வருமான வரித் துறை ஆணைகள் பிறப்பித்தது. இதில் செலுத்தப்பட வேண்டியவை மற்றும் அபராதம் ஆகியவற்றிற்கான வட்டி சேர்க்கப்படவில்லை.

இதனை எதிர்த்து நோக்கியா இந்தியா, 11-4-2013 அன்று டெல்லி உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்தது. டெல்லி உயர் நீதிமன்றம் நோக்கியாவை வருமான வரி ஆணையரிடம் (முறையீடு) முறையீடு செய்யுமாறு நெறியாணைகள் பிறப்பித்தது. 2013 மே 31 ஆம் தேதி அன்று வருமான வரி ஆணையர் இதனைத் தள்ளுபடி செய்தார். இவ்வழக்கு வருமான வரி முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன்பு மேல்முறையீடு செய்யப்பட்டு அங்கு இந்நாள்வரை நிலுவையில் உள்ளது.

2-9-2013 அன்று விண்டோஸ் கைபேசி செயல்பாட்டு சிஸ்டம் தயாரிப்பாளர் மற்றும் நோக்கியாவின் ஸ்மார்ட் ஃபோன் வகைகள் அனைத்துக்கும் உதவிய மைக்ரோசாஃப்ட், நோக்கியா கைபேசி வர்த்தகத்தைக் கையகப்படுத்துவதாக அறிவித்தது. இந்த ஒப்பந்தப்படி கைபேசிகளைத் தயாரிக்கவோ அல்லது விற்கவோ நோக்கியா அனுமதிக்கப்படவில்லை. எனவே, நோக்கியாவின் அனைத்துக் கருவிகள் மற்றும் சேவை (கைபேசி) வர்த்தகம்

2014 ஜூலை 25] [திரு. பி. தங்கமணி]

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் இணைய வேண்டியிருந்தது. அனைத்து நோக்கியா தொழிற்சாலைகளும் (ஸ்ரீபெரும்புதூர் தொழிற்சாலை உட்பட) இதில் அடங்கும். இவ்வாறு மைக்ரோசாஃப்ட்டால் எடுத்துக்கொள்ளப்படும் செயல்பாட்டிற்கு காலக்கெடு *25-4-2014* ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் நோக்கியா நிறுவனம்மீது, வருமான வரித் துறை ஏற்கெனவே எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து இச்சட்டத்தின்கீழ் நிறுவனத்தின் வங்கிக் கணக்கு மற்றும் அசையாச் சொத்துகளை இந்திய வருமான வரிச் சட்டத்தின் பிரிவு *281*-ன்கீழ் முடக்கி ஆணையிடப்பட்டது. இதனால், மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் உடன்படிக்கையின்படி சென்னை நோக்கியா நிறுவனத்தை மாற்றம் செய்ய இயலாமல் விடுபட்டது. *25-4-2014*-க்குப் பிறகு கைபேசிகளை நோக்கியா தயாரிக்கவோ, விற்கவோ முடியாது என்பதால், சென்னை தொழிற்சாலை மைக்ரோசாஃப்ட் நிறுவனத்திற்கு ஓர் ஒப்பந்த உற்பத்தியாளராக ஆனது. எனவே, இனிமேல் சென்னைத் தொழிற்சாலையின் உற்பத்தி அளவு மைக்ரோசாஃப்டின் தேவை ஆணைகளைப் பொறுத்தது ஆகும். இக்காரணங்களினால் தனது பணியாளர்களுக்கு தன்விருப்ப ஓய்வு திட்டத்தை நோக்கியா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

- ❖ முடிவடைந்த ஒவ்வொரு வருட பணிக் காலத்திற்கும் மூன்று மாத ஊதியம்.
- ❖ மூன்று மாத அறிவிக்கை கால ஊதியம்.
- ❖ மொத்தத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம்.
- ❖ சேர்த்துள்ள விடுப்பு நாட்களுக்கு இரட்டிப்பு ஊதியம்.

இத்திட்டத்தை ஏற்று சுமார் *5,600* பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் தன்விருப்ப ஓய்வு திட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். இவர்களுக்குக் கிடைக்கும் இழப்பீட்டுத் தொகை ரூபாய் *4* இலட்சம் முதல் ரூபாய் *10* இலட்சம் வரை இருக்கும். இவ்வாறு, இவர்களுக்கு அளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை சுமார் ரூபாய் *250* கோடியாகும் என நோக்கியா நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், இணைப்புத் திட்டம் என அழைக்கப்படும் ஒரு திறன்

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 25

மேம்பாட்டுத் திட்டத்தை தன்விருப்ப ஓய்வு திட்டத்திற்கு சம்மதம் தெரிவித்தவர்களின் திறனை மேம்படுத்த நோக்கியா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம், அவர்கள் வேறு பணி அல்லது சுயதொழில் ஆகியவற்றில் ஈடுபடலாம். சென்னை தொழிற்சாலையில் தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை சுமார் 900 ஆகும்.

மேலும், நோக்கியா நிறுவனம் 5-11-2012 அன்று தனது விரிவாக்கத் திட்டத்திற்காக ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள பொறுப்புறுதிகளை நிறைவேற்ற இயலாது என்பதால் அதனை முறித்துக்கொள்ள வேண்டி அறிவிக்கை அளித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஸ்ரீபெரும்புதூர், நோக்கியா நிறுவனத்தில் தன்விருப்ப ஓய்வு என்ற பெயரால் 5,600 தொழிலாளர்கள் ஆட்குறைப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

தொழிற்சாலையே 2005-க்குப் பிறகுதான் வந்தது. அங்கே பணியாற்றியவர்களுடைய சராசரி வயது 25 தான். தன்விருப்ப ஓய்வு என்றால் முன்பெல்லாம் 50 வயதிற்குமேல்தான் அமல்படுத்தப்பட்டு வந்தது. 25 வயதுக்காரர்களுக்கே விருப்ப ஓய்வு வந்திருப்பதுதான் தற்போது ஏற்பட்டிருக்கின்ற புதுமை. V.R.S. திட்டத்தை அரசு தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஏனென்றால் இது ஒரு மறைமுக ஆட்குறைப்பு. இப்போது மீதியுள்ள 900 பேர் அங்கே பணியில் இருக்கின்றார்கள். மாதம் 10 இலட்சம் கைபேசிகளை அவர்கள் உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றார்கள். அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற விவரங்கள் எல்லாம் சரியானவை. ஆனால் இவர்கள் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்திலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கைபேசிகளைப் பெற்று உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றார்கள். மைக்ரோசாஃப்ட் நிறுவனம் அதை நிறுத்தினால், நாங்கள் தொழிற்சாலையை மூடிவிடுவோம் என்று இங்கே இருக்கின்ற தொழிற்சாலை நிருவாகம் சொல்லிக்கொண்டிருக்கின்றது.

2014 ஜுலை 25] [திரு. அ. சவுந்தரராசன்]

ஆகவே, எந்த நேரத்திலும் மீதியிருக்கின்ற 900 பேருக்கும் வேலை பறிபோகும் ஆபத்து இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன். நோக்கியா நிறுவனம் இந்த நிலைக்கு ஆளாகியிருக்கின்ற காரணத்தினாலே இதனுடைய சப்ளையர் கம்பெனிகள் BYD என்கிற கம்பெனியில் 4,000 பேர் வேலை இழந்துவிட்டார்கள்; Lite-on என்கிற கம்பெனியிலே ஆட் குறைப்பு நடந்திருக்கின்றது; Foxconn, Sanmina, Flextronics கம்பெனிகளென்று கிட்டத்திட்ட 12,000 பேர் இதனால் வேலை இழந்திருக்கின்றார்கள். ஆகவே அரசு அந்த நோக்கியா கம்பெனியிலே விருப்ப ஓய்விலே சென்றிருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு மாற்று வேலை கிடைக்கவும், எங்கெல்லாம் புதிய மின்னணுத் தொழிற்சாலைகளுக்கு ஆள் எடுக்கின்றார்களோ, அங்கெல்லாம் இவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலை கிடைக்கச் செய்திடவும், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் உரையை முடித்துவிடுகின்றேன். அரசு நேற்றுகூட அறிவித்திருக்கின்ற பல்வேறு திட்டங்கள், தொழில் பழகுனர் திட்டம், சுயதொழில் செய்வோர் திட்டம், இதுபோன்ற திட்டங்களிலே நோக்கியா தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, ரூ.10 இலட்சம் வரை கடன் கிடைக்கவும் ஏற்பாடு செய்து, அந்த 25 வயது இளைஞர்களுக்கு, பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் கவனத்தை நான் ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோக்கியா நிறுவனம் 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்டது. 2005 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு நோக்கியா கம்பெனி வருவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவு முயற்சி எடுத்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று தெரியவில்லை. அதை விளக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், அவர்கள் இந்தியாவிலே முதலீடு செய்ய வேண்டும்

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 25

என்று ஐந்து நகரங்களைத் தேர்வு செய்கிறார்கள். அவர்கள் சென்னை வந்து பார்க்கின்றபோது இங்கே எந்த எலக்ட்ரானிக்ஸ் கம்பெனியும் இல்லையே, நாங்கள் எப்படி ஆரம்பிப்பது என்று கேட்டார்கள். அன்றையதினம், தைரியமாக நீங்கள் இங்கு வந்து ஆரம்பியுங்கள், நாங்கள் உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்கிறோம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதியாலும், 2003 ஆம் ஆண்டு நல்ல தொழில் கொள்கை இங்கு இருந்த காரணத்தினாலும்தான் 5 நகரங்களை விட்டுவிட்டு, சென்னையிலே வந்து தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். ஆரம்பித்து கிட்டத்தட்ட 7 ஆண்டு காலமாக சரியாகப் போய்க்கொண்டிருந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், அதிலும் குறிப்பாக கடந்த மூன்றாண்டு காலமாக தினந்தோறும் 6 இலட்சம் கைபேசிகள் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். சுமார் 7,000 பேர் நேர்முகமாகவும், 3,500 பேர் மறைமுகமாகவும் அந்த ஒரு கம்பெனியில் மட்டும் வேலை செய்துகொண்டிருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில் 2012 ஆம் ஆண்டு மத்திய அரசும் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசும் நாடாளுமன்றத்திலே முன் தேதியிட்ட ஒரு நிதிச் சட்டத்தை Retrospective Act-ஆக கொண்டு வருகின்றார்கள். அது என்னவென்று சொன்னால், ஏற்கெனவே ஃபின்லாந்திலிருந்து இங்கே வருபவர்களுக்கு இரட்டை வரி விதிப்பு விலக்கு என்று இந்தியாவிற்கும், ஃபின்லாந்திற்கும் இடையே ஓர் ஒப்பந்தம் இருந்தது. அதைமீறி அவர்கள் 2012 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டுவருகின்றார்கள். இனிமேல் அது பொருந்தாது, புதிய சட்டத்தின்படி அந்த ராயல்டிக்கு 10 சதவிகிதம் வரி கட்ட வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவருகின்றார்கள். அந்த வகையில் அவர்களுக்கு 2,080 கோடி ரூபாயை வரியாக விதித்து வருமான வரித் துறை நோக்கியா கம்பெனிக்கு நோட்டீஸ் அனுப்புகின்றது. அதன்பின் அவர்கள் டில்லி கோர்ட்டுக்குச் செல்கின்றார்கள். அங்கு டில்லி கோர்ட்டிலே அது தள்ளுபடியாகி அவர்கள் வருமான வரித் துறையிலேயே பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இதற்கு நடுவிலே உங்களுடைய தொழிற்சங்கம்கூட டில்லி உயர் நீதிமன்றத்தில் impleading petition என்று போட்டு, இது வருமான வரித் துறைக்கும், நோக்கியா கம்பெனிக்கும் உள்ள பிரச்சினை, இதில் நாங்கள் தலையிட முடியாது என்று சொல்லி கோர்ட் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது என்பதும் மாண்புமிகு

2014 ஜுலை 25] [திரு. பி. தங்கமணி]

உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இவ்வளவு பெரிய நோக்கியா கம்பெனி தமிழகத்திற்கு வந்தது, செயல்பட முடியாமல் போனதற்குக் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசும், மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசும்தான் காரணம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு இந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவந்தார்கள்? மத்திய அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் தொழிலாளர்களுக்காக ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று அன்று நினைத்திருந்தால், அந்தத் தொழிற்சாலையை முடக்காமல், நீங்கள் தொடர்ந்து வேலையைச் செய்துகொண்டிருங்கள், வழக்கு ஒரு பக்கம் நடக்கட்டும் என்று சொல்லியிருந்தால்கூட பரவாயில்லை. உடனடியாக, அதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஒரு மாத சம்பளம் கொடுப்பதற்குக்கூட இல்லாமல் வங்கிக் கணக்கை முடக்கி வைத்துவிட்டார்கள். அதற்குப் பின்னால் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நீதிமன்றத்தை அணுகித்தான் அவர்களுக்குச் சம்பளமே கொடுத்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அங்கு இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்தவகையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்தார்கள். அங்கேயிருக்கின்ற 15 ஆயிரம் பேர், அதேபோன்று ancillary unit-லேயிருக்கின்ற 10 ஆயிரம் பேரினுடைய வேலையைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இரவு, பகல் பாராமல் மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்காக கடுமையான முயற்சிகளைச் செய்தார்கள். ஆனால், நீதிமன்றமும் நமக்குக் கை கொடுக்கவில்லை. அங்கு இருக்கின்ற கம்பெனியும் நமக்குக் கை கொடுக்கவில்லை. இதற்கு நடுவில் Microsoft நிறுவனம், அந்த Nokia நிறுவனத்தை வாங்கிவிட்டது. அவர்கள் ஒரு கட்-ஆப் தேதி வைக்கின்றார்கள். டிசம்பர் மாதக் கடைசிக்குள் நீங்கள் இந்த case-ஐ முடித்து, எங்களிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று சொல்கின்றார்கள். அதுவும் முடியாமல், அதற்குப் பின்னால் நான்கு மாத காலம் Microsoft நிறுவனம் அவர்களுக்கு time கொடுக்கின்றது. 25-4-2014 வரை நாங்கள் இருக்கின்றோம் அதற்குள் அந்த வழக்கை முடித்து எங்களிடத்திலே ஒப்படையுங்கள் என்று சொல்கின்றது. வழக்கு முடியாத

[திரு. பி. தங்கமணி] [2014 ஜூலை 25

காரணத்தினால், அந்த Microsoft நிறுவனம் சென்னையில் மட்டும் Nokia கம்பெனியை விட்டு விட்டு, உலக அளவிலே இருக்கின்ற மற்ற Nokia கம்பெனிகளை எடுத்துவிட்டது. அதற்குப் பின்னால் அந்த Microsoft நிறுவனம் அவர்களிடத்திலே, நாங்கள் வேண்டுமானால் ஓர் ஆண்டு காலம் உங்களுக்கு contract முறையில் உற்பத்தி செய்வதற்கு வேலையைத் தருகின்றோம் என்று சொல்கின்றது. அப்பொழுது contract முறையில் வேலையைச் செய்கின்றபோது, இவ்வளவு கைபேசிகளைத் தயாரிக்க முடியாது என்ற காரணத்தினால், அந்த நிறுவனம் உடனடியாக விருப்ப ஓய்வு திட்டத்தை அறிவிக்கின்றது. அந்த விருப்ப ஓய்வு திட்டம்பற்றி நாங்கள் பல்வேறு தொழிற்சங்கங்களிடம் இதுகுறித்து பேசினோம். நீங்கள் ஒரு மாத காலம் கொடுங்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னோம். ஆனால், அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் மத்தியில், நாளை 'ஒன்றும் இல்லை' என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று பயம் வந்துவிட்டது. அதனால், 4 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வரை விருப்ப ஓய்வுத் திட்டம் அறிவிக்கின்றார்கள் என்று சொல்லி, கிட்டத்தட்ட 5,600 பேர் விருப்ப ஓய்வு வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார்கள். இதுதான் நடந்த உண்மை. இதற்கு முழுக்க முழுக்க கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசும், மத்திய காங்கிரஸ் அரசும்தான் காரணம். அதுவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 60 சதவிகிதம் இளம் பெண்கள் அங்கே வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அதைக்கூட மனிதாபிமானம் இல்லாமல் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசும், மத்திய காங்கிரஸ் அரசும் செய்த காரணத்தினால்தான்-அதுவும் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்து, இவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிய நிறுவனத்தை மூடியது அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு நான் பதில் சொல்லத் தயாராயிருக்கின்றேன். நான் பேசி முடித்துவிடுகின்றேன். அதற்குப் பின்னால் இருக்கின்ற 900 பேருக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார்கள். அந்த 900 பேருக்கும் ஓர் ஆண்டு காலம் வேலை உறுதி என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நாங்களும் பேசிக் கொண்டேதான் இருக்கின்றோம். அதற்குள் இந்த வழக்கு முடிந்துவிட்டது என்று சொன்னால், அந்த 900 பேருக்கும் எந்த

2014 ஜூலை 25] [திரு. பி. தங்கமணி]

பாதிப்பும் இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்திலே தெளிவுபடக் கூறுகின்றேன். இந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவருவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு, பல்வேறு மாநிலங்களுடைய போட்டிக்கிடையில் இதைக் கொண்டு வந்தார்கள். ஆனால், இன்றையதினம் கிட்டத்தட்ட 10,000 பேருடைய வேலை பறிபோய் அவர்களுடைய வாழ்க்கையே பிரச்சினையானதற்கு காங்கிரசும், தி.மு.க.-வும் எடுத்த நடவடிக்கைகள்தான் காரணம். இதனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மனது எந்த அளவிற்குப் புண்பட்டிருக்கும், எந்த அளவுக்குக் கஷ்டப்பட்டிருக்கும் என்பதையெல்லாம் நீங்கள் நினைவிலே கொள்ள வேண்டும். அந்தக் கஷ்டம்தான், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் இல்லாமல் ஆக்கியது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

## 5. தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்பட்டுள்ளதை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே ஒன்றும் point of order இல்லை. (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பில் இப்போது விவாதம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குழுக்களின் அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) அடுத்த business-க்கு நான் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) Agenda-வில் உள்ள அடுத்த அலுவலுக்குள் நான் சென்றுவிட்டேன். இப்பொழுது கேட்கிறீர்களே? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன திரு. சந்திரகுமார்? (குறுக்கீடு) இல்லை, கடிதம் கொடுத்திருக்கிறீர்கள். பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒருவர் மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அதைத்தான் பேசுகிறீர்களா?